Vol.22 | No. 3 | March 2018



The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## Diocesan Convention 11-12.02.2018







Anamukham Pastoral Visit - 25.02.2018



Munchirai, Kodimaram Blessing
17.02.2018

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 22 No :3 March 2018

# இறையருள்
# IRAIARUL



## உள்ளே...


| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 05 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 06 |
| மாதா தொலைக்காட்சி | 11 |
| Feast and B’days | 12 |
| சிறுமலர் இயக்கம் | 13 |
| இளையோர் இயக்கம் | 13 |
| சமூக சேவை சங்கம் | 14 |
| செங்கோட்டைச் செய்திகள் | 15 |
| மறைவட்டச் செய்திகள் | 16 |
| இதரச் செய்திகள் | 19 |
| Bishop's Engagements | 20 |



## Editorial Board

*Patron*
**His Excellency**
**Mar George Rajendran SDB**

*Chief Editor*
**Fr. Joseph Santhosh**

*Executive Editor*
**Mr. Soundara Raj**

*Associate Editors*
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**



Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop’s House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:
**Berlin Athencod**

Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
*Diocese of Thuckalay*

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/79/2018 28 February 2018

Dears,

Dear and Reverend Fathers,

We are in the holy season of Lent. Through our prayer, fasting and acts of charity we prepare ourselves for the celebration of the paschal mystery of the death and resurrection of Jesus Christ.

The word 'paschal' reminds us of Passover of the Old Testament. Jesus' death occurred at the time of Passover, when Jews commemorated their passage from slavery in Egypt through the Red Sea to freedom in their own land. Thus, the death of Christ and his resurrection have come to be understood in the Church as the fulfillment of God's mighty acts to save His people. God acted decisively to rescue Israel from Pharaoh's army at the Red Sea. In the death and resurrection of Jesus, God acted to save His people from sin and death.

Communication with God, which the Jewish people expected through participation in the Passover sacrifices, is fully realized by the Christians who participate sacramentally in the death and resurrection of the incarnate Son. In AD 313 the Emperor Constantine legalized Christianity in the Roman Empire and it became possible for Christians to travel to Jerusalem, the site of Our Lord's triumphal entry, trial and shameful death on a cross. The travel diary of Egeria, a 4th century Spanish nun, gives us detailed descriptions of the Holy Week services of worship in Jerusalem, beginning with Palm Sunday. These liturgies deliberately and accurately reconstruct the final events of Jesus' life in order to re-present them in the midst of worshipping congregations.

An essential principle in Christian worship exemplified in the Eucharist is that of re-presentation. The Greek word for it is anamnesis, which means to make a past event a present reality. Remembrance is the English translation and it fails to bring out its correct meaning.

When Jews celebrate the Passover, they believe that the saving work of God in delivering them from slavery in Egypt is re-presented in their midst by means of the essential elements of this anamen-

sis. They are the gathered community of believers, the elements prescribed by God - unleavened bread, wine, lamb, and bitter herbs - and, reciting the story of the event using the words of Sacred Scripture. After this passion, Christ is made truly present in the celebration of the Christian Eucharist. The Assembled community of the faithful, the ordained priest, the bread, and wine, and the biblical words made the death, resurrection and ascension of Jesus which took place 2000 years ago a present reality. In a like manner, the Holy Week services that we shall celebrate towards the end of this month, bring to us those final events in Jesus' life which comprise the Paschal Mystery

PALM SUNDAY begins with Jesus' triumphal entry into Jerusalem. The mood reverses rapidly from acclamation to 'Crucify him! Crucify him!' We contemplate how the fickleness of human nature and our personal, sometimes, wavering loyalty and devotion are made present before our very eyes. After all, it was our sins that crucified Jesus.

MAUNDY THURSDAY re-presents the institution of the Lord's Supper. In this celebration the actions of Jesus and the apostles are made present in our midst. We gather with them to hear Jesus: "This is my Body…This is my Blood… Do this in remembrance of me." A more accurate rendering would be, "Do this to make me present with you." We also spend this day in adoration commemorating the agony of Jesus in the garden of Gethsemane. The word "Maundy" comes from the Latin, maudatum (commandment). It refers to Jesus' commandment to love one another.

All these lead to GOOD FRIDAY and the cross. Where does the cross mean within faith in Jesus Christ? The cross implies a cruel death as well as a death of love. The cross is the radical expression of love that gives itself completely. It is the expression of a life that is completely lived for others.

In other religions, man feels guilty and then attempts to remove guilt through a conciliatory action. In the New Testament it is not man who goes to God with a reconciling gift; but God comes to man in order to give the gift to him. "God so loved the world that he gave his only Son, that whoever believes in him should not perish but have eternal life" (John 3:16). God restores us on the initiative of His own power to love. "All this is from God, who through Christ reconciles us to himself" (2 Corinthians 5:18). God does not wait until the guilty come to be reconciled; He goes to

meet them and reconciles them. Here is the true direction of the incarnation leading to the cross. The cross moves from above to below. It does not stand as the work of expiation which humankind offers to a wrathful God, but as that expression of God's immense love for us!

Holy week culminates with the GREAT VIGIL OF EASTER. It is evident from the Gospels that the resurrection occurred sometime during the night. The Exodus from Egypt began at night, and because of the parable of the wise and foolish virgins, Christians expected the second coming of Jesus to happen at night. Hence the widespread custom of vigil watch services developed in the Christian community. Expectant people gathered to watch and pray during the night before certain celebrations.

Our observance and participation in the Holy Week are elucidated in these words of St Leo the Great: "He (Jesus) is whose sufferings are shared by the martyrs with their glorious courage and by all those who believe and are born again at the moment of their regeneration. This is why we duly celebrate the Lord's Pasch with the unleavened bread of sincerity and truth. The leaven of our old malice is thrown away, and a new creature drinks deep and feeds upon the Lord himself. For our participation in the body and blood of Christ has this effect: it makes us become what we receive; it enables us, with our whole being, in our spirit and our flesh, to bear him in whom and with whom we have died and been buried and risen again."

I invite you dear Fathers, to make this Easter celebration meaningful not only for you personally but also for our people by conducting the various services with great care so that we can worthily receive the graces that accompany with these celebrations.

CONCLUSION

As I conclude my circular, I want to thank you for the dedicated ministry that you are undertaking in the Eparchy for the good of our people. I am sure the good Lord will bless you abundantly. Continue to pray for the intentions of the Eparchy. As the holy season of Lent is culminating in the celebration of the Holy Week, kindly prepare our people well so that they can enter in to the paschal mysteries of Jesus Christ meaningfully. With my prayers and blessings,

Yours in Christ Jesus,



+George Rajendran SDB

Bishop of Thuckalay

# அருட்சகோதரர்களிடமிருந்து...




இறையருளால் அனைத்து அருட்சகோதரர்களும் நலமாக உள்ளனர். கேரளாவில் பயிலும் அருட்சகோதரர்கள் தங்களின் தேர்வை நிறைவு செய்து கோடை விடுமுறைக்காக மார்ச் 15 முதல் 20க்குள் மறைமாவட்டத்திற்கு திரும்புகின்றனர். உஜ்ஜெயின் அருட்சகோதரர்கள் மார்ச் 28 அன்று மறைமாவட்டம் வருகை தருகின்றனர். சத்னாவில் பயின்று வரும் அருட்சகோதரர் டோஜி புனித வார நிகழ்வுகளை நிறைவு செய்து ஏப்ரல் 15 அன்று மறைமாவட்டம் வருகை தருகின்றார்.

மார்ச் 9 அன்று உயர்குருமடங்களில் மெய் யியல் மற்றும் இறையியல் முதலாண்டு பயில செல்லும் அருட்சகோதரர்களின் கலந்துரையாடல் நடைபெறும்.

இவ்வாண்டு 9 அருட்சகோதரர்கள் மெய்யியல் பட்டப்படிப்பை நிறைவு செய்ய உள்ளனர். அவர்கள் மே 1 முதல் மறைமாவட்டத்தில் ஓராண்டு களப்பணியாற்ற உள்ளனர்.

அருட்சகோதரர்கள் கூடுகை மார்ச் 24 அன்று சங்கமத்தில் நடைபெறும். அதன் பின் அருட்சகோதரர்கள் புனித வார திருப்பணிகளுக்காக பல்வேறு பங்குகளுக்கு செல்ல இருக்கின்றனர்.

மார்ச் 26 அன்று காலை 7 மணிக்கு அருட்சகோதரர்கள் மகேஷ் மற்றும் ஜோஸ் ஆகியோர் சங்கமத்தில் வைத்து ஆயர் அவர்களிடமிருந்து திருஉடை பெற்றுக் கொள்கின்றனர். மார்ச் 27 அன்று அருட்சகோதரர் றோபின் துணை திருத்தொண்டராக அருட்பொழிவு செய்யப்படுகின்றார்.

**குருத்துவ அருட்பொழிவு**

திருத்தொண்டர்கள் சுபின், ஜெபனேஷ் ஆகியோர் தங்கள் குருத்துவ அருட்பொழிவுக்கான பணிகளில் ஈடுபட்டுள்ளனர். திருத்தொண்டர் சுபின் அவர்கள் ஏப்ரல் 2 அன்று சங்ஙனாச்சேரி துருத்தி ஆலயத்தில் வைத்தும், திருத்தொண்டர் ஜெபனேஷ் அவர்கள் ஏப்ரல் 7 அன்று சூசைபுரம் ஆலயத்தில் வைத்தும், பெனடிக்டைன் சபையில் பயின்று வரும் கல்லுவிளை சார்ந்த திருத்தொண்டர் டோரத்தி அவர்கள் ஏப்ரல் 6 அன்று கல்லுவிளையில் வைத்தும் ஆயர் அவர்களால் குருவாக அருட்பொழிவு செய்யப்படுகின்றனர்.

அருட்சகோதரர் டோஜி
தலைவர்

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

## குழந்தை ஈசோ இயக்கம்

"விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்"
திபா: 123:1

**கலைப்போட்டிகள்**

குழந்தை ஈசோ இயக்கத்தின் கலைப்போட்டிகள் ஆறுகாணி மறைவட்டத்திற்கு 04.02.2018 அன்று மேழக்கோடு புனித பிரான்சிஸ் அசிசி பள்ளியிலும் மற்ற 5 மறைமாவட்டங்களுக்கு 13.02.2018 அன்று கல்லுவிளை ஆசீர் அரங்கிலும் நடைபெற்றது.

இக்கலைப்போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளின் பெயர் பட்டியல் பின்வருமாறு:

<u>ஆறுகாணி மறைவட்டம்</u>

| மழலையர் - கதை சொல்லுதல் (லூக்: 19:1-10) | | |
|---|---|---|
| **ஆண்கள்** | **இடம்** | **பெண்கள்** |
| அபின் ஷாஜன், மேழக்கோடு | I | அனுகிரகா, மேழக்கோடு |
| பெர்லின், ஆறுகாணி | II | தியா ரதீஸ், ஆறுகாணி |
| சூரியா, பத்துகாணி | III | டெனிஷா, பத்துகாணி |
| **மழலையர் - செய்கைப்பாடல்** | | |
| அபின் ஷாஜன், மேழக்கோடு | | I |
| பெர்லின், ஆறுகாணி | | II |
| சூரியா, பத்துகாணி | | III |
| **பேச்சுப்போட்டி(புனித பிரான்சிஸ் அசிசி)** | | |
| அபின் ஷாஜன், மேழக்கோடு | I | அனுகிரகா, மேழக்கோடு |
| பெர்லின், ஆறுகாணி | II | தியா ரதீஸ், ஆறுகாணி |
| சூரியா, பத்துகாணி | III | டெனிஷா, பத்துகாணி |
| **குழந்தைகள் - குழுநடனம்** | | |
| பத்துகாணி | | I |
| மேழக்கோடு | | II |
| ஆறுகாணி | | III |

## சூசைபுரம் மறைவட்டம்

| மழலையர் - கதை சொல்லுதல் (லூக்: 19:1-10) | | |
|---|---|---|
| ஜெறின் மெரிட், சூசைபுரம் | I | இன்பேன்சியா, மாங்கரை |
| டெரின் டினோ, கிள்ளியூர் | II | றியா ஜோசப், சூசைபுரம் |
| அஸ்வின், மாங்கரை | III | றுஜினா, தக்காளிவிளை |
| **மழலையர் - செய்கைப்பாடல்** | | |
| சூசைபுரம் | I | |
| மாங்கரை | II | |
| கிள்ளியூர் | III | |
| **பேச்சுப்போட்டி(புனித பிரான்சிஸ் அசிசி)** | | |
| ஆஸ்லின் டினோ, கிள்ளியூர் | I | ஆர்லின் ஜினோஷா, சூசைபுரம் |
| அருள் ரீகன், பாலப்பள்ளம் | II | ரக்ஷனா, பிலாங்கரை |
| ஜெஸ்வின்,சூசைபுரம் | III | பெர்லின் ஸ்டெனி, மாங்கரை |
| **குழந்தைகள் - குழுநடனம்** | | |
| மாங்கரை | I | |
| சூசைபுரம் | II | |
| கிள்ளியூர் | III | |

## நித்திரவிளை மறைவட்டம்

| மழலையர் - கதை சொல்லுதல் லூக்: 19:1-10 | | |
|---|---|---|
| **ஆண்கள்** | **இடம்** | **பெண்கள்** |
| பெரின், நித்திரவிளை | I | ஜெஸ்மி, சீனிவிளை |
| சரத், கிறிஸ்துராஜபுரம் | II | அனுஷ்கா, கிறிஸ்துராஜபுரம் |
| ரோஷன், வாறுதட்டு | III | அஷிமா, வயலின்கரை |
| **மழலையர் - செய்கைப்பாடல்** | | |
| வயலின்கரை | I | |
| வாறுதட்டு | II | |
| நித்திரவிளை | III | |
| **பேச்சுப்போட்டி(புனித பிரான்சிஸ் அசிசி)** | | |
| மரியகுருக்ஸ், நித்திரவிளை | I | ஷானிமோள், சீனிவிளை |
| ரீகன், சீனிவிளை | II | அரிஷா, வாறுதட்டு |
| ஜிஜோ, வயலின்கரை | III | பிபிஷா, நித்திரவிளை |

| குழந்தைகள் - குழுநடனம் | |
|---|---|
| நித்திரவிளை | I |
| வயலின்கரை | II |
| வாறுதட்டு | III |

## படந்தாலுமூடு மறைவட்டம்

| மழலையர் - கதை சொல்லுதல் (லூக்: 19:1-10) | | |
|---|---|---|
| ஆலன், தெற்றியோடு | I | சாந்திரா, அண்ணிக்கரை |
| ஈஸ், அதங்கோடு | II | ஆனி ஜாண், கழுவன்திட்டை |
| ரென்னிக், கழுவன்திட்டை | III | ஹன்னா, படந்தாலுமூடு |
| **மழலையர் - செய்கைப்பாடல்** | | |
| அண்ணிக்கரை | I | |
| கழுவன்திட்டை | II | |
| அதங்கோடு | III | |
| **பேச்சுப்போட்டி(புனித பிரான்சிஸ் அசிசி)** | | |
| **ஆகாஷ், கழுவன்திட்டை** | I | **ஜானியா, தெற்றியோடு** |
| **ஜோஹான், தெற்றியோடு** | II | **ஜோஷிபா, கழுவன்திட்டை** |
| **ஆஷிக், பளுகல்** | III | **பிரான்கா, படந்தாலுமூடு** |
| **குழந்தைகள் - குழுநடனம்** | | |
| அண்ணிக்கரை | I | |
| தெற்றியோடு | II | |
| கழுவன்திட்டை | III | |

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

| மழலையர் - கதை சொல்லுதல் (லூக்: 19:1-10) | | |
|---|---|---|
| **ஆண்கள்** | **இடம்** | **பெண்கள்** |
| ஆலன், முழுக்கோடு | I | மெர்பின் ஸ்டெஜி, முக்கூட்டுக்கல் |
| ஜோலின்ஆபிரகாம், மஞ்சாலுமூடு | II | ஆல்பினா சுனில்குமார், மாலைக்கோடு |
| ஸ்மைஜின் ஜினோ, மாறப்பாடி | III | லியோனா ஷெறின், முழுக்கோடு |
| **மழலையர் - செய்கைப்பாடல்** | | |
| மாலைக்கோடு | I | |

| | | |
|---|---|---|
| முக்கூட்டுக்கல் | | II |
| மாறப்பாடி | | III |
| **பேச்சுப்போட்டி(புனித பிரான்சிஸ் அசிசி)** | | |
| ஸ்டெபின், முக்கூட்டுக்கல் | I | அனுஷ்கா, மஞ்சாலுமூடு |
| ஜாண் டேவிட், மஞ்சாலுமூடு | II | அஸ்வினி, காரோடு |
| அஸ்வந்த், முழுக்கோடு | III | டோம்சி, முழுக்கோடு |
| **குழந்தைகள் - குழுநடனம்** | | |
| முக்கூட்டுக்கல் | | I |
| மாலைக்கோடு | | II |
| முழுக்கோடு | | III |

**<u>தக்கலை-பிலாங்காலை மறைவட்டம்</u>**

| | | |
|---|---|---|
| **மழலையர் - கதை சொல்லுதல் (லூக்: 19:1-10)** | | |
| **ஆண்கள்** | **இடம்** | **பெண்கள்** |
| ஜோயல், பரைக்கோடு | I | ட்றெஸிடென்னிஸ் ஜோய், நாகர்கோவில் |
| ரிஜோ, காட்டாத்துறை | II | ஷைனி, காட்டாத்துறை |
| ஆல்விஸ் ரியான், பிலாங்காலை | III | ஆன்ஜியோனா, கல்லுவிளை |
| **மழலையர் - செய்கைப்பாடல்** | | |
| கைசாலவிளை | | I |
| காட்டாத்துறை | | II |
| பரைக்கோடு | | III |
| **பேச்சுப்போட்டி(புனித பிரான்சிஸ் அசிசி)** | | |
| ஜிப்சன் ஜார்ஜ், நாகர்கோவில் | I | அல்போன்சா மெனோரா, நாகர்கோவில் |
| விபின், காட்டாத்துறை | II | அக்ஷா, கைசாலவிளை |
| அஜய், பரைக்கோடு | III | ஷானுகா, காட்டாத்துறை |
| **குழந்தைகள் - குழுநடனம்** | | |
| நாகர்கோவில் | | I |
| தக்கலை | | II |
| பரைக்கோடு | | III |

**குழந்தைகளுக்கான சிறப்பு தியானம் - கிறிஸ்டீன் 2018**

குழந்தைகளுக்கான சிறப்பு தியானம் 'கிறிஸ்டீன் 2018' பிப்ரவரி 10, 11 ஆகிய இரு நாட்கள் கல்லுவிளையில் நடைபெற்றது. பாலர் பிரிவு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையுள்ள 700க்கும் மேற்பட்ட குழந்தைகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கிறிஸ்டீன் 2018 தியானம் பிப்ரவரி 10 அன்று ஆசீர் அரங்கில் தூய ஆவிப் பாடலுடன் காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது. வகுப்பு 5 வரை யிலான குழந்தைகளுக்கு சி.எம்.சி துறவற சபை அருட்சகோதரிகள் தலைமையிலும், வகுப்பு 6 முதல் 9 வரையிலான மாணவர்களுக்கு பாலப்பள்ளம் பங்குத்தந்தை அருட்தந்தை பிரின்டோ அவர்கள் தலைமையிலும் நடைபெற்றது.

**வகுப்புகள்**

'பெற்றோர்களை அன்பு செய்ய வேண்டும்' என்ற தலைப்பில் அருட்தந்தை பிரிண்டோ அவர்களும், 'பாவம் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள்' என்பது பற்றி அருட்தந்தை ஜாண் ஜோசப் அவர்களும் தியான உரையாற்றினர். மேலும் 'செபம்' - அருட்சகோதரி றீஜா அவர்களும், 'கடவுளின் அன்பு' -அருட்சகோதரி லிபியா அவர்களும், 'இயேசு நாமத்தின் சக்தி' - அருட்சகோதரி லிபியா அவர்களும், 'புனித சாவாறா தந்தையின் மரண சாசனம்' - அருட்சகோதரி பிளஸ்ஸி அவர்களும் வகுப்புகளை சிரிக்கவும், சிந்திக்கவும் உதவுகின்ற வகையில் வழிநடத்தினர். மேலும் காதுக்கும், உடலுக்கும் ஊக்கமூட்டும் பாடல்ளும், செய்கை நடனங்களும், ஒலி, ஒளி காட்சிகளும் நடைபெற்றன.

**திருப்பலி**

முதல் நாளன்று குழந்தை ஈசோ இயக்குநர் அருட்தந்தை ஜோமோன் அவர்களும், இரண்டாம் நாளன்று புலரி அச்சக இயக்குநர் அருட்தந்தை ஜினோய் அவர்களும் திருப்பலி நிறைவேற்றி மறையுரையாற்றினர்.

**பாவசங்கீர்த்தனம்**

குழந்தைகளின் உள்ளக்கறைகளை களைந்து இறைவனோடு ஒன்றித்து இறைவனின் விருந்தைப் பெற்றுக் கொள்ள தயாரிக்கும் வண்ணம் ஒப்புரவு அருளடையாளம் நடைபெற்றது.

**ஆராதனை**

தியானத்தின் இரு நாட்களிலும் குழந்தைகளை இறைவனிடத்தில் ஒன்றிணையச் செய்து, நற்கருணை நாதரை ஆராதிப்பதற்காக சிறப்பான முறையில் மறை மாவட்ட இளையோர் இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் ஆராதனை நடைபெற்றது.

இத்தியானம் சிறப்பாக அமைய காரணமாக இருந்த மறைமாவட்ட ஆயர், தியானத்தை வழிநடத்திய அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும்

பங்கேற்ற அனைத்து குழந்தைகளுக்கும் நன்றி.

**மறைவட்ட கருத்தரங்கு**

படந்தாலுமூடு மறைவட்ட குழந்தை ஈசோ இயக்கத்தினருக்கான ஒருநாள் கருத்தரங்கு 24.02.2018 அன்று அண்ணிக்கரை புனித மத்தேயு நடுநிலைப்பள்ளியில் வைத்து இயக்குநர் தலைமையில் நடைபெற்றது.

அண்ணிக்கரை பங்குத்தந்தை அருட்தந்தை தாமஸ் தக்கலை அவர்கள் கருத்தரங்கை தொடங்கி வைத்தார். அருட்சகோதரர் மகேஷ் அவர்கள் புனிதர்களின் வாழ்க்கை வரலாறுகளை மேற்கோள் காட்டி, குழந்தைகளும் அதுபோன்று இறைவனுக்கு, கீழ்படிந்து வாழவேண்டும் என்ற சிந்தனையை மையப்படுத்தி செய்கைப் பாடல் மற்றும் விளையாட்டுகள் வழி கருத்தரங்கை நடத்தினார். தெற்றியோடு பங்குத்தந்தை அருட்தந்தை ஜினோ தெக்கேதலக்கல் அவர்களும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

அருட்தநந்தை ஜோமோன்
இயக்குநர்

## மாதா தொலைக்காட்சி

இறையருளால் கத்தோலிக்க திருச்சபையின் மாதா தொலைக்காட்சி இந்திய தொலைக்காட்சி வரலாற்றில் புதிய மைல்கல்லை எட்டியுள்ளது. பிப்ரவரி 7 முதல் சன் டைரக்ட் மற்றும் முக்கியமான DTH களில் ஒளிபரப்பாகி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**1. DTH Services**

TATA SKY: 1557, SUN DIRECT: 618,
AIRTEL: 816, VIDEOCON D2H: 599

**2. Set Top Boxes**

In Tamil nadu: Arasu Cable, SCV, TCCL, Aadaar and VK Digital
In Bangalore: Hathway, City Cable, ACT and IN Cable

**3. Internet**

LIVE streaming in www.madhatv.in, iOS & Android Apps

**4. IP Television** (Europe, USA, Canada and Australia)

Lebara play, Lyca, Roku, Salai TV, Chitram TV

## BIRTHDAYS & FEASTDAYS OF REV FATHERS-MARCH

| | | |
|---|---|---|
| 03 | Rev. Fr. Joseph Santhosh | BIRTHDAYS |
| 15 | Rev. Fr. Mathew Thekkekutt | |
| 15 | Rev. Fr. Thomas Powathuparampil | |
| 17 | Rev. Fr. Chacko Akkathara CMI | |
| 20 | Rev. Fr. Thomas Sathiyanesan | |
| 26 | Rev. Fr. Sumesh Valliyamthadathil | |
| FEASTDAYS | Rev. Fr. Joseph Santhosh | MARCH 19 |
| | Rev. Fr. Prince Maliyil | |
| | Rev. Fr. Dency Mundunadackal | |
| | Rev. Fr. Sajan Nettaponghu | |
| | Rev. Fr. Josy Puthenpurackal | |
| | Rev. Fr. Jimmy Thekkekadumathil | |
| | Rev. Fr. Jinu Thekkethalackal | |
| | Rev. Fr. Jinoy Thottiyil | |
| | Rev. Fr. Jose Vayalil | |
| | Rev. Fr. Jose Muttathupadom | |
| | Rev. Fr. Joseph Anithottam CMI | |
| | Rev. Fr. Jomon Mangalamadom | |
| | Rev. Fr. Printo Kurias | |
| | Rev. Fr. Joseph Ottalankal | |
| | Rev. Fr. Vinu D. Joseph | |
| | Rev. Fr. John Joseph | |

அருட்தந்தையர்களுக்கான இருநாள் கருத்தரங்கம் மார்ச் 12 மற்றும் 13 ஆகிய இரு நாட்கள் தக்கலை சங்கமத்தில் நடைபெறும். சங்ஙனாச்சேரி உயர் மறைமாவட்ட துணை ஆயர் தோமஸ் தறயில் அவர்கள் கலந்து கொண்டு கருத்தரங்கை வழிநடத்துகிறார்.

## தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

### குறும்பட உருவாக்கல் பயிற்சி முகாம்

படந்தாலுமூடு மறைவட்ட இளையோர்களுக்கான ஒருநாள் பயிற்சி பிப்ரவரி 24 அன்று கிள்ளியூர் புனித தேவ மாதா ஆலய வளாகத்தில் நடைபெற்றது. அருட்தந்தை ஜினு ஜேக்கப் மற்றும் சங்ஙனாச்சேரி ஊடகக்கல்லூரி, திரு. ஜாண்சன் ஆகியோர் கலந்து கொண்டு குறும்படப் பயிற்சி வழங்கினர். முன்னதாக இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் அனைவரையும் வரவேற்று முன்னுரை வழங்கினார். மதிய உணவுக்கு பின் நித்திரவிளை கருணை இல்ல மாற்றுத்திறனாளி மாணவர்களை சந்தித்து அவர்களுக்காக குறும்படம் ஒன்றை தயாரித்து வெளியிட்டனர். 20 இளையோர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

இளைஞர்களுக்கான சிறப்பு தவக்கால ஒருநாள் தியானம் 11.03.2018 அன்று கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் காலை 8.30 மணிமுதல் மாலை 3.30 மணி வரை நடைபெறும். கோவை சகோ. வின்னி அவர்கள் கலந்து கொண்டு தியானத்தை வழிநடத்துகிறார். இளையோரை மையப்படுத்தி இசையும் பாடல்களும் இடம்பெறும். ஒப்புரவு அருளடையாளமும் நடைபெறும்.

செல்வி. பபிஷா | செயலர்.

---

## சிறுமலர் மிஷன் லீக்

### தேசிய செயற்குழு கூட்டம்

சிறுமலர் மிஷன்லீக் இயக்க தேசிய செயற்குழு கூட்டம் 24.01.2018 அன்று கேரளாவிலுள்ள மாதுறு பவனில் நடைபெற்றது. நமது மறைமாவட்டத்திலுள்ள பொறுப்பாளர்கள் அருட்சகோதரி ஆன் கிரேஸ் மற்றும் திரு. ஞானதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். தேசியத் தலைவர் திரு. பினோயி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மிஷன் லீக் இயக்க வளர்ச்சிப்படிகள் பற்றி ஆலோசிக்கப்பட்டது. நிறைவில் திரு.ஞானதாஸ் அவர்கள் நன்றி தெரிவித்தார்.

அருட்தந்தை ஷோஜோ|இயக்குநர்

Kanyakumari Social Service Society

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

**திறன் வளர் கலைவிழா (Talent Fest)**

தக்கலை மறைமாவட்டத்தின் கீழ் கல்லுவிளை சமூக சேவை சங்க வழிகாட்டுதலில் இயங்கும் (AIDACT) மாற்றுத்திறனாளி சிறப்புப்பள்ளி மாணவர்களுக்கான டேலன்ஸ் பெஸ்ட் எனப்படும் கலைப்போட்டிகளை ஆண்டுதோறும் கல்லுவிளை சமூக சேவை சங்கம் நடத்தி வருகிறது. இவ்வாண்டு நடைபெற்ற போட்டிகளில் முதல் பரிசை பருத்திவிளை சாந்தி நிலையம் சிறப்புப் பள்ளியும், இரண்டாம் பரிசை நித்திரவிளை கருணை இல்லம் சிறப்புப் பள்ளியும், மூன்றாம் பரிசை கழுவன்திட்டை நம்பிக்கை ஆலயம் மற்றும் பாலப்பள்ளம் ஜோதி நிலையம் சிறப்புப் பள்ளிகளும் பெற்றன. இந்நிகழ்வை கல்லுவிளை சமூக சேவை சங்க இயக்குநர் அருட்தந்தை சஜி எலம்பாசேரில் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

**கலக்கல் தளிர்**

தமிழ் வழியில் பயிலும் பாலர் பள்ளிமாணவர்களுக்காக 'கலக்கல் தளிர்' என்னும் போட்டியை கல்லுவிளை சமூக சேவை சங்கம் 23 பிப்ரவரி அன்று நடத்தியது. இதில் 19 பள்ளிகளிலிருந்து 167 சிறார்கள் கலந்து கொண்டனர். திட்டங்கனாவிளை புனித மரியன்னை பாலர்பள்ளி முதல் பரிசையும், அண்ணிக்கரை புனித மத்தேயு பள்ளி இரண்டாம் பரிசையும், மாறப்பாடி புனித தோமையார் பாலர்பள்ளி மூன்றாம் பரிசையும் பெற்றது. நிறைவு விழாவில் அருட்சகோதரி றோஸ் மார்டின் SABS அவர்கள் தலைமையுரையாற்றி பரிசுகளை வழங்கினார். பாலர்பள்ளிகளின் ஒருங்கிணைப்பாளர் அருட்சகோதரி மரியா SDS அவர்களும் உடனிருந்தார்.

அருட்தந்தை சஜி எலம்பசேரில்
இயக்குநர்

## திருத்தோண்டுதள தொடக்கவிழா

மதுரை திருத்தொண்டுதள தொடக்கவிழா 2018 ஏப்ரல் 15 அன்று நடைபெற உள்ளது.

## பட்டமளிப்புவிழா

புனித அல்போன்சா கல்லூரியின் முதல் பட்டமளிப்பு விழா மார்ச் 16 அன்று நடைபெறும்.

## செங்கோட்டைச் செய்திகள்

**தன்னார்வ தலைவர்கள் கூடுகை**

செங்கோட்டை மறைபரப்புதள தன்னார்வ பணியாளர்களின் கூடுகை 18.02.2018 அன்று மாலை 6 மணியளவில் புதூர் பள்ளியில் அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் செங்கோட்டை வட்டார பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். அருட்தந்தை ஜிப்ஸன் அவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார். பொறுப்பாளர்களின் செயல்பபாடுகள் குறித்து திருத்தொண்டுதள ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

**தன்னார்வ பணியாளர்களின் கூடுகை**

தன்னார்வ பணியாளர்களுக்கான கூட்டம் 22.01.2018 அன்று மாலை புதூர் ஆங்கிலப்பள்ளியில் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் குடும்ப சந்திப்பு செல்லும்போது கடைபிடிக்கப்பட வேண்டிய வழிமுறைகள், பணியாளர்களின் செயல்பாடுகள் ஆகியவை சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அருட்தந்தை செபி அவர்களும் உடனிருந்தார்.

**ஆயர் சந்திப்பு**

26.02.2018 அன்று அன்பு இல்லத்தில் நடைபெற்ற ஆராதனையில் ஆயர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். தொடர்ந்து ஒப்புரவு அருளடையாளமும் விருந்தும் நடைபெற்றது. அதன் பின் நடைபெற்ற கூட்டத்தில் அருட்தந்தை ஜிப்ஸன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். செங்கோட்டை மறைபரப்புதளத்தில் நடைபெறும் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் குறித்து அந்தந்த இயக்குநர்கள் எடுத்துரைத்தனர். ஆயர் அவர்கள் மறைபரப்புதளம் செழித்தோங்க வாழ்த்துக் கூறி தவக்கால சிந்தனைகளையும் பகிர்ந்தார்.

அருட்தந்தை ஜாண்பால்
ஒருங்கிணைப்பாளர்

### நற்செய்திப் பெருவிழா

ஒகிப்புயலால் மாற்றி வைக்கப்பட்ட மறைமாவட்ட நற்செய்திப் பெருவிழா பிப்ரவரி 10, 11 ஆகிய இருநாட்கள் கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் நடைபெற்றது.

# மறைவட்ட செய்திகள்




## சூசைபுரம் மறைவட்டம்

**புனித வியாகப்பர் ஆலயம் மாங்கரை**

23.02.2018 அன்று மாங்கரை புனித வியாகப்பர் ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்தந்தை அலக்ஸ் புத்தேட் அவர்கள் தலைமையில் காலை 9 மணிமுதல் மாலை 5.30 மணி வரை நற்கருணை ஆராதனை நடைபெற்றது. அருட்தந்தை அவர்கள் படுக்கை நோயாளி ஒருவரின் இல்லத்திற்குச் சென்று நற்கருணை வழங்கினார்.

04.02.18 அன்று ஆலயத்தில் இளைஞர் இயக்க கூட்டம் நடைபெற்றது. சுமார் 20 இளையோர்கள் கலந்து கொண்டார்.

தவக்காலத்தை முன்னிட்டு 16 வீடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடக்க நிலை, நிறைவுநிலை மற்றும் 14 பாடுகளின் நிலைகள் என ஒவ்வொரு இல்லங்களிலும் சென்று சிலுவைப்பாதையை தியானித்தனர்.

11.02.2018 அன்று நெல்லுவிளை புனித லூர்து மாதா உறவிய ஆண்டுவிழா பங்குத்தந்தை தலைமையில் நடைபெற்றது. செபமாலை, கலைநிகழ்சிகள் மற்றும் அன்பின் விருந்தும் நடைபெற்றன. அதைப்போன்று 18.2.2018 புனித பெர்னதெத் உறவிய ஆண்டுவிழாவும் சிறந்த முறையில் நடைபெற்றது.

மாங்கரை பள்ளியில் நடைபெறும் குழந்தைகள் பாராளுமன்றத்தை 18.2.2018 அன்று மானந்தவாடி மற்றும் கன்னியாகுமரி பகுதியிலுள்ள எம்.பி.ஏ மாணவர்கள் சந்தித்து மகிழ்ந்தனர்.

மாங்கரை திருப்பணியாளர்கள் விவசாயத்தை அனைவரும் ஊக்கப்படுத்தும் நோக்குடன் ஆலய வளாகத்தில கீரை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர்.

**கிள்ளியூர்**

கிள்ளியூர் ஆலய பலிபீடம் மற்றும் மேற்கூரை புனரமைப்புப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.

**பாலப்பள்ளம்**

பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் மாதந்தோறும் நடைபெறும் தியானம் 17.02.2018 அன்று நடைபெற்றது, 18.02.2018 அன்று மாணவ மாணயிருக்கான சிறப்புத் திருப்பலியும் நடைபெற்றன.

25.02.2018 அன்று

திருமணமான மகளிருக்கான திருப்பலி மாலை 4 மணிக்கு பங்குத்தந்தை அருட்தந்தை பிரின்டோ அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தொடர்ந்து 6 மணிவரை நடைபெற்ற சிறப்பு வகுப்பை திரு. அப்பல்லோனியஸ் அவர்கள் குடும்ப செபம், தலைமைத்துவ பண்பு, குடும்ப பராமரிப்பு ஆகியவற்றில் பெண்களின் பங்கு என்ற சிந்தனையில் வழிநடத்தினார்.

## நித்திரவிளை மறைவட்டம்

### புனித ஜார்ஜியார் திருத்தலம் முஞ்சிறை

முஞ்சிறை பங்கில் புதிதாக அமைக்கப்பட்ட கொடிமரம் பிப்ரவரி 18 அன்று ஆயர் அவர்களால் மந்திரிக்கப்பட்டது. மாலை 5 மணிக்கு பங்குமக்கள் ஆயருக்கு வரவேற்பு அளிக்க, ஆயர் அவர்கள் கொடிமரத்தை மந்திரித்து திருப்பலி நிறைவேற்றினார். ஆயர் அவர்கள் இதற்காக உழைத்த பங்குத்தந்தை அருட்தந்தை அஜீஸ் மற்றும் பங்குமக்களுக்கு நன்றி தெரிவித்தார். குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

12.2.2018 அன்று சாம்பல் திங்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. தொடர்ந்து வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களில் உறவியங்கள் சிலுவைப்பாதை மற்றும் நற்கருணை ஆராதனையை சிறப்பித்து வருகின்றனர். 23.2.18 அன்று காலை 8 மணிமுதல் மாலை 5 மணி வரை அன்பகத்தில் சிறப்பு நற்கருணை ஆராதனை மற்றும் வழிபாடுகள் நடைபெற்றது.

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

உலக அமைதிக்காக ஒருநாள் செபிக்க திருத்தந்தை அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அனைத்து ஆலயங்களிலும் ஒருநாள் ஆராதனை நடைபெற்றது.

### மாறப்பாடி

மாறப்பாடி புனித தோமையார் ஆலயத்தில் உலக அமைதி ஆராதனை 23.02.2018 அன்று நடைபெற்றது. காலை 6 மணிமுதல் ஒவ்வொரு உறவிய மக்களும் வருகை தந்து உலக அமைதிக்காக ஆராதித்தனர். நிறைவில் அருட்தந்தை ஜோமோன் அவர்கள் நற்கருணை ஆசீர் வழங்கி நிறைவு செய்தார்.

தவக்காலத்தை முன்னிட்டு வெள்ளிக்கிழமைதோறும் சிலுவைப்பாதையும், நேர்ச்சை கஞ்சியும் வழங்கப்பட்டு வருகின்றன.

### முக்கூட்டுக்கல்

முக்கூட்டுக்கல் திருக்குடும்ப ஆலயத்தில் 23.02.2018 அன்று காலை 6 மணிமுதல்

மாலை 6 மணிவரை உலக அமைதி ஆராதனை நடைபெற்றது. உறவியங்கள் மற்றும் முக்கூட்டுக்கல் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் இளங்குருமட அருட்சகோதரர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு வருகை தந்து உலக அமைதிக்காக செபித்தனர். நிறைவில் இளங்குருமட மாணவர்கள் தலைமையில் பொது ஆராதனை நடைபெற்றது. இதில் பங்கு மக்களும் கலந்து கொண்டனர்.

### முழுக்கோடு

முழுக்கோடு புனித தோமையார் ஆலயத்தில் மறைபரப்பு வார கொண்டாட்டம் ஜனவரி 7 முதல் 12 வரை மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மறைக்கல்வி மாணவர்கள் பங்கிலுள்ள இல்லங்களுக்குச் சென்று செபித்து, அவர்களிடமிருந்து உதவி பெற்று மறைபரப்புப் பணிக்காக வழங்கினர். மேலும் உறவியங்களில் நற்செய்திக் கூட்டமும் நடத்தப்பட்டது.

அதன்படி அருட்தந்தை ஷோஜோ அவர்கள் 7.1.2018 அன்று முதல் இரு உறவியங்களிலும், 8 அன்று மூன்றாம் உறவிய மக்களுக்கு தியான உரை வழங்கினார். 9 அன்று நான்கு, ஐந்து உறவியங்களில் அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்களும், 10 அன்று அருட்தந்தை ஜாண்ஜோசப் அவர்கள் ஆறாவது உறவியத்திலும், 11 அன்று அருட்தந்தை பிரின்டோ அவர்கள் ஏழாம் உறவியத்திலும், 12 அன்று எட்டு மற்றும் ஒன்பதாம் உறவியங்களில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களும் தியான உரை வழங்கினர்.

தகவல் சேகரிப்பு: திருமதி ஹேமா|சினேக லதா|செலின் மேரி

## வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| மார்ச் 01 | கோவை மாகாண சி.எம்.சி துறவற சபை சந்திப்பு |
| மார்ச் 03 | தன்னார்வ திருத்தொண்டு பணியாளர்கள் கூட்டம் |
| மார்ச் 12-13 | அருட்தந்தையர்கள் கருத்தரங்கு |
| மார்ச் 17 | புனித அல்போன்சா கல்லூரி தினம் |
| மார்ச் 26 | குருத்துவ அருட்பொழிவுக்கு முந்தைய அருட்பொழிவுகள் |
| மார்ச் 28 | துறவறத்தோருக்கான தியானம் |

# இதரச் செய்திகள்

**கத்தோலிக்க ஆயர் பேரவை கூட்டம்**

இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் 33 வது பொதுக்கூடுகை பிப்ரவரி 2 முதல் 9வரை பெங்களூர் புனித ஜாண் மருத்துவக்கல்லூரியில் நடைபெற்றது. பேராயர் ஜாம்பத்திஸ்தா திகுவாத்ரோ அவர்களின் தலைமையில் திருப்பலியுடன் ஆரம்பமானது. 180 ஆயர்கள் கலந்து கொண்டனர். மியான்மர் நாட்டின் பேராயர் சார்லஸ் கார்டினல் போ அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

**தேசிய கருத்தரங்கம்**

புனித அல்போன்சா கல்லூரியின் ஆங்கிலத்துறை சார்பில் 'Literature and War' என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கம் பிப்ரவரி 16 அன்று நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் சச அவர்கள் கலந்துகொண்டு தொடங்கி வைத்தார். சங்கனாச்சேரி தூய பெர்க்மான்ஸ் கல்லூரி பேராசிரியர் தோமஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கருத்தரங்க ஆய்வுக் கட்டுரையை எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் கல்லூரி தாளாளர். முதல்வர் மற்றும் ஆங்கிலத்துறைத் தலைவரும் உடனிருந்தனர். நிகழ்வுகளை ஆங்கிலத்துறை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

**துறவறத்தாருக்கான தியானமும் திருத்தைல மந்திரிப்பும்**

மார்ச் 28 அன்று அருட்தந்தையர்கள் மற்றும் துறவறத்தாருக்கான தியானமும், திருத்தைல மந்திரிப்பும் சங்கமத்தில் நடைபெறும். தியான உரை, ஆராதனை, ஒப்புரவு, திருப்பலி ஆகியவை நடைபெறும்.

**கருத்தரங்கு**

சங்ஙனாச்சேரி உயர் மறைமாவட்டம் 'சீரோமலபார் சபையின் சவால்கள் மற்றும் வாய்ப்பு' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை சங்ஙனாச்சேரி அமலோற்பவக் கல்லூரியில் பிப்ரவரி 23 அன்று நடத்தியது. நமது மறைமாவட்டத்திலிருந்து பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், அருட்தந்தை தோமஸ் தக்கலை, அருட்தந்தை ஜாண்ஜோசப், அருட்தந்தை டோபின் ஆலப்புரக்கல், அருட்சகோதரி. றோஸ்லின் SABS, அருட்சகோதரி மிஸி மரியா SJSM, திரு. தாமோதரன் அவர்களும் ஆகியோர் கலந்து கொண்டனர்.

| BISHOP’S ENGAGEMENTS MARCH 2018 | | | |
|---|---|---|---|
| ***DAT*** | ***DAY*** | ***TIME*** | ***EVENTS*** |
| 1 | Thu | 02.00 pm<br>04.30 pm | Madurai: Visiting CMI Provincial<br>Meeting with Madurai Archbishop |
| 2 | Fri | 10.00 am | STI: Theology Faculty Meeting \| Curia meeting |
| 3 | Sat | 02.00 pm | Padanthalumoodu: Meeting with Mission Volunteers |
| **4** | **Sun** | **07.30 am** | **Chenamcode: Holy Qurbana** |
| 5-7 | Mon | | Bishop’s House |
| 13 | Thu | 05.00 pm | Mukkoottukal: Minor Seminary |
| 9 | Fri | | Bishop's House: Meeting with 4th Year brothers |
| 10 | Sat | 10.00 am | Soosaipuram: SABS Mission Orientation Programme |
| **11** | **Sun** | **03.00 pm** | **Changanassery: Qurbana at OMMI Convent** |
| 12-13 | Mon | 09.30 am<br>01.30 pm | Sangamam: Orientation Programme for Priests<br>Priests’ Conference |
| 14 | Wed | 09.30 am | Curia Meet\|Manjalumoodu: Holy Qurbana SDS convent |
| 15 | Thu | 04.30 pm | Kazhuvanthittai: Nambikkai Alayam Annual Day |
| 16 | Fri | 10.00 am<br>05.00 pm | Soosaipuram: Alphonsa college, Graduation day<br>Bishop’s House: Meeting with the Parents of Deacons |
| 21 | Wed | 05.00 pm | Christurajapuram: Visit to SMSM convent |
| **18** | **Sun** | **07.30 am** | **Kattathurai: Holy Qurbana** |
| 19 | Mon | 05.30 pm | Anayadi: St. Joseph’s Feast at SJSM Convent |
| 20 | Tue | 05.00 pm | Palapallam: Joythinilayam Annual Day |
| 21 | Wed | 06.00 pm | Karode: Holy Qurbana at SDS convent |
| 22 | Thu | 04.30 pm | Chenamcode: Special School Annual Day |
| 23 | Fri | | Bishop's House |
| 24 | Sat | 06.00 pm | Vayalinkarai: Holy Qurbana for ASMI sisters |
| **25** | **Sun** | **08.00 am** | **Palm Sunday: Netta parish** |
| 26 | Mon | 07.00 am | Sangamam: Vestition and Minor Orders |
| 27 | Tue | | Bishop’s House |
| 28 | Wed | 09.30 am | Sangamam: Recollection& Myron Blessing |
| 29 | Thu | 06.30 pm | Maundy Thursday: Cheenivilai parish |
| 30 | Fri | 07.00 am | Good Friday: Vayalinkarai |
| 31 | Sat | | Visit of Ms. Anu and Family |

Fr. Thomas Sathianesan |Eparchial Chancellor




TCYM, Short Film, *SURYA*, Dedicated to Karunai Illam, Nithiravilai, 24.02.2018



Shenkottai, Anpu Illam Visit - 25.02.2018




St. Alphonsa College, National Congress on *War and Literature*, 16.02.2018



Kuzhandai Iso Iyakkam Competitions 13.02.2018



Home Day, St. Mary's Minor Seminary 24.02.2018

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570